<u>முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்</u>

**<u>O.S. No.481/2021</u>**

**பெயர்-தேவன் (பி.த.சா.1)**

**தேதி- 11.08.2026**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் புதுச்சேரி கல்மண்டபத்தில் தான் நிரந்தரமாக வசிக்கிறேன் என்றால் சரிதான். அரசு ஆவணங்கள் அனைத்தும் அந்த முகவரியில் தான் இருக்கிறது என்றால் சரிதான். வாதியின் வழக்கை எதிர்த்து நடத்த 1 முதல் 3 பிரதிவாதிகள் வரவில்லை என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளின் குடும்ப சம்மந்தமான விஷயங்களை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதியின் சகோதரர் பெயர் முருகன் என்றால் சரிதான். முருகன் இறந்த பிறகு அவருடைய வாரிசுகளும் அவரது அண்ணான வாதியும் பாகபிரிவினை செய்துகொண்டனர் என்றால் சரிதான். அந்த பாக பிரிவினையில் வாதிக்கு கொடுக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் சர்வே எண்கள் 27/4, 27/5, 27/6 எ, 27/6 பி ஆகிய இடங்களை 2 ம் பிரதிவாதி எனக்கு கிரையம் கொடுத்தார். அந்த இடத்திற்கு நான்கு எல்லகள் ஏரிகரைக்கு மேற்கு, கலியபெருமாள் தேவராஜ் நிலத்திற்கு கிழக்கு, சரஸ்வதி மைனர் கணேஷ்ராஜா பாகத்திற்கு வடக்கு, கோவிந்தசாமி, குப்புசாமி நிலத்திற்கு தெற்கு என்றால் அது சரியானது கிடையாது. இந்த நான்கு எல்லைகள் மேற்படி புல எண்களுக்கு சரியானதா இல்லை என்று அளந்து பார்ப்பதற்கு ஒரு ஆணையர் நியமனம் செய்வதற்கு எனக்கு ஆட்சேபனை இருக்கிறதா என்றால் இல்லை. மேற்படி புல எண்களில் கண்ட சொத்துக்கள் வாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் அதை மறுக்கிறேன். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு 26/1 பி, 27/1 சி, 27/1 டி பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முருகனுடைய பாகத்தை கிரையம் கொடுக்க நினைத்தால் முன்னுரிமை அடிப்படையில் வாதிக்கு மட்டுமே கிரையம் கொடுக்கவேண்டியது என்றுசொன்னால் அதை நான் மறுக்கிறேன். நான் கிரையம் வாங்கிய தேதி 30.11.2020. அந்த கிரைய ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை கடனுக்காக அடமானம் வைத்திருக்கிறேன். அதை நீதிமன்றத்தில் சொல்லி அனுமதி வாங்கவில்லை என்றால் சரிதான். பாகபத்திரம் எழுதும்போது வாதிக்குரிய பாகத்தை முருகனின் பாகத்தில் எழுதப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் பிழை திருத்தம் பத்திரம் எழுதிதரும்படி கேட்டது பற்றி நான் அறிந்து கொள்ளவில்லை. 2020 க்கு முன்பாக அந்த

சொத்துக்கள் தொடர்பாக நடந்த விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. வாதியின் பிராதை படித்துப்பார்த்தேன். அதில் சொல்லப்பட்டுள்ள 2020 க்கு முன்பாக பிரச்சனைகள் குறித்து நான் எதுவும் பதில் போடவில்லை என்றால் சரிதான் எனக்கு அது பற்றி எனக்கு தெரியாது. நான் வாதியின் மகனிடம் பேசியதாக சொல்லும் பதிவுகள் அடங்கிய வா.த.சா. ஆ 14 சி.டி யை நான் இதுவரை நான் கேட்கவில்லை. சொத்துக்களில் பிரச்சனை இருக்கிறது வாங்கக்கூடாது என்று வாதி சொல்லியும் மீதி தவறான கிரையம் வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சி.டியில் உள்ள பதிவுகளை தெரிந்துகொண்டே உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.வழக்கு சொத்து வாதிக்குரியது என்றும் எனவே அது தொடர்பாக வருவாய் துறை ஆவணங்களை ஏற்படுத்தியிருந்தால் அது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்தின் நான்கு எல்லை என்னவென்றால் கிழக்கே ஏரிக்கரை, மேற்கே முருகன் வகையறா, வடக்கே வாய்க்கால், தெற்கே வாதி தட்சிணாமூர்த்தி நிலம். மேற்படி நான்கு எல்லைகள் வாதியின் புல எண்ணுக்கு சம்பந்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல. பெயரளவில் கிரையம் வாங்கிவிட்டு வாதியின் சொத்தை அடியாட்களை வைத்து அபகரித்து பொய்யான கட்சி நடத்துகிறேன் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் படித்து பார்த்தேன். எனது முதல் விசாரணை வாக்குமூலங்கள் அனைத்தும் சரியல்ல என்றும் வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியமானது சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையெழுத்து செய்தார்.

(Sd/-S. Muthu Murugan)
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.